# பாகிஸ்தானிடமிருந்து பீரங்கிக்குண்டுகள் கொள்வனவில் கடற்படையினர் மோசடி

பாகிஸ்தானிடமிருந்து வாங்கப்படும் கடற்படை, பீரங்கிக் கப்பல்களுக்கான ஷெல்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் மீண்டும் அங்கிருந்தே அவற்றைப் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இத்தகவலை வெளியிட்டுள்ள கொழும்பு பத்திரிகை ஒன்று பாகிஸ்தானிடமிருந்து பீரங்கிக் குண்டுகள் கொள்வனவு செய்யப்பட்ட போது பெருமளவு மோசடிகளும் இடம்பெற்றதாக தெரிவித்துள்ளது. முன்னர் பாகிஸ்தான் தயாரிக்கும் குண்டுகளை கடற்படை கப்பல்களில் பாவிப்பதால் அதிர்ச்சி அதிகரித்து கப்பல்கள் பாதிக்கப்படலாம் என கடற்படையினர் எச்சரித்திருந்தனர். இதனால் அரசு சீனாவிடம் இருந்து பீரங்கிக் குண்டுகளை வாங்க அனுமதியளித்திருந்தது. எனினும் தொடர்ந்து பாகிஸ்தானிடமிருந்தும் கடற்படையினர் பீரங்கிக் குண்டுகளை கொள்வனவு செய்தனராம். இக்கொள்வனவில் பண மோசடி இடம்பெற்றதாக கணக்காளர் நாயகம் தற்போது கண்டுபிடித்துள்ளாராம் இதனால் தற்போது — 4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 220 பிரசோற்பத்தி ஆனி 22 (06 - 07 - 1991) சனி

# சார்க் மகாநாட்டுப் பாதுகாப்பு
# அரசு தீவிரமாக ஆராய்கிறது

## வெளிநாட்டுத் தலைவர்களை வெளியில் தங்க வைக்க ஆலோசனை!

எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் மகாநாட்டிற்கு (சார்க்) பாதுகாப்பு வழங்கப்படுவது தொடர்பாக ஆயுதப்படையினர் தரப்பில் புதிய பிரச்சினைகள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக கொழும்பில் அதிகரித்துவரும் வெடிகுண்டு அச்சுறுத்தலும், அது தொடர்பாக பொது மக்கள் கொண்டுள்ள பீதியின் மத்தியிலும் பிறநாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளும் ஓர் உச்சி மகாநாட்டை கொழும்பு மாநகரின் மத்தியில் நடாத்துவது குறித்து பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றதாம்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## காவிரி ஆற்று நீர் பிரதமருக்கு முறையீடு

தமிழ் நாட்டுக்கு காவிரி ஆற்று நீரை திறந்து விடுவதற்கு கர்நாடக அரசு மறுத்துவிட்டது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவிடம் முறையிட்டுள்ளார்.

காவிரி நீரை வழங்குமாறு கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவை வற்புறுத்துமாறு அவர் பிரதமரை கேட்டுள்ளார்.

## கொலை செய்த பெண் சிங்களப் பெண்ணாம்!

ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணம் என கருதப்படும் சந்தேக நபரான பெண் சிங்களப் பெண்ணின் உருவ அமைப்பைக் கொண்டவரென நியூஸ்வீக் பத்திரிகையின் நிருபர் பார்கஸ பிறிவாத் என்பவர் குறிப்பிட்டுள்ளார்

இந்தக் கொலையை ஸ்ரீலங்கா அரசே திட்டமிட்டுச் செய்திருக்கலாமென கருதுவதாகவும் நியூஸ்வீக் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. (33)

## வடபகுதி மீன் கருவாடு கொழும்பு செல்லவில்லை

கடந்த ஆண்டு ஜூன்மாதம் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் வடபகுதியிலிருந்து 391237 கிலோ மீனும் 51 ஆயிரத்து 435கிலோ கருவாடும் லொறிகளிலும், ரயில் மூலமாகவும் கொழும்பு நகருக்கு வந்ததாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தத் தொகை மீன் கருவாடு என்பவற்றை வடபகுதியைத் தவிர ஏனைய பகுதிகளிலிருந்தும் கொழும்புக்கு எடுத்துவர முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதத்துக்குப் பின் கொழும்பில் மீனின் விலை அதிகரித்துள்ளதாகவும் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும்வர்த்தகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து பெருமளவு மீன் ரின்களும், கருவாடும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும், வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (33)

## பிறப்புச் சாட்சிப் பத்திரம் புத்தகங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பிலுள்ள வருமான வரி பரிசோதகர் ஒருவரின் வீட்டில் இருந்து பிறப்பு அத்தாட்சிப்பத்திர போலிதஸ்தாவேஜுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலக மேலதிக → 4ஆம்பக்கம் பார்க்க

## கொழும்பில் பாதுகாப்பு பொலிஸ்-வர்த்தகர் சந்திப்பு

கொழும்பில் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அப்பகுதியில் உள்ள பெரும்வர்த்தகர்களோடு பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்

பேச்சுகளின்போது நகரின் ஒவ்வொரு வீதிகளிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பது என்றும் வெளியார் நடமாட்டத்தை இக்குழுகண்காணிக்கும் எனவும் முடிவாகியது.

## ராஜீவின் மரணம் குறித்து ஜெயலலிதாவின் கருத்து!

ராஜீவ் காந்தி தமிழகத்தில் கொல்லப்பட்டது, தளபதி ஒருவரின் வீரமரணம் போல் அமைந்துள்ளதாக கூறியுள்ளார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா.

நேற்று சட்டப்பேரவையில் ராஜீவ் மரணம் குறித்து இரங்கல் தீர்மானம் மீது உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குண்டு வெடித்ததால் அவரின்முழுஉருவத்தையும் காணமுடியாமல் போய்விட்டது என ஜெயலலிதா தனது இரங்கலுரையில் குறிப்பிட்டார்.

## திருமலைபேயாறில் மோதல் படையினர் தப்பியோட்டம்

திருமலை கும்புறுப்பிட்டி, குச்சவெளி, கலப்பையாறு முகாம் இராணுவத்தினர் பேயாறுபகுதியில் தேடுதல் நடாத்தினர்.

இதன் போது படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர். படையினரும் திருப்பி தாக்குதல் நடாத்தினர்.

புலிகளின் தாக்குதல் கடுமையாகவே படையினர் நிலை குலைந்து ஓடினர்.

இம்மோதலில் புலிகள் தரப்பில் மோகன் (தம்பலகாமம்), ராஜு (கண்ணியா) சிறில் (செல்வநாயகபுரம்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

## அதிபர் வேண்டுகோள்

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலைக்கு வருகை தருமாறு வித்தியாலய அதிபர் கே. பேரின்பநாயகம் கேட்டுள்ளார். (ப-12)

## மூன்றாம் தவணை முதல் மாலை நேர வகுப்புக்கள்

இந்த ஆண்டு மூன்றாம் தவணை முதல் பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்களை நடாத்துமாறு கல்வி அமைச்சு சகல அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

ஜூலை மாதம் 1ஆம் திகதி முதல் இதனை நடைமுறைப்படுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்தபோதிலும் அதற்கான சில வசதிகள் போதாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (74)

## இந்திய வம்சாவளியினருக்கு வேலைவாய்ப்பு இல்லை

பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஜனவசமை ஆகியவற்றின் தோட்டங்களில் வயதுவந்த பிள்ளைகளுக்கு வேலை வழங்கும்போது இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கே வேலை வழங்கப்படுகிறதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புகையிரதப்பகுதி ஊழியர் திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களில் உள்ள புகையிரத நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சிலருக்கு இம் மாதம் 16 ஆம் திகதி முதல் வடமத்திய, கிழக்கு மாகாணங்களின் புகையிரத நிலையங்களில் பணிபுரியுமாறு இட மாற்ற உத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# 11ஆவது குண்டு எங்கே? இப்போது இதுவே கேள்வி

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு அதிர்ச்சியிலிருந்து கொழும்பு வாசிகள் இன்னமும் மீளவில்லை என்பதையே அங்கிருந்து வரும் தகவல்கள் காட்டுகின்றன.

மக்களைத் தெம்பூட்டுவதற்காகப்பாதுகாப்புத்துறையினர் எவ்வளவோ 'முயற்சித்தும்' அவர்கள் அவற்றையெல்லாம் கேட்பதாகவில்லை. அடுத்த பதினோராவது குண்டு எங்கே வெடிக்கும் என்பதே அங்கு எல்லோரினதும் கேள்வியாக உள்ளது.

கொழும்பில் முதலாவது குண்டு 1984 ஜனவரி 28ஆம் திகதி ஒபரோய் ஹோட்டலில் வெடித்தது. அதில் ஒரு பெண்மணி கொல்லப்பட்டார். அதையடுத்து 1986மே 3ஆம் திகதி கொழும்பு விமான நிலையத்தில், எயர்லங்கா விமானத்தில் வெடித்த குண்டில்20 பேர் மரணமாகினர். இக்குண்டுவெடித்து 3தினங்களின் பின்னர் 1986மே7-ம்திகதிகோட்டைமத்தியதொலைத்தொடர்பு நிலையத்தில் குண்டு வெடித்ததில் 14 பேர் இறந்தனர். 23 நாட்களுக்குப் பின்னர் மே 30 இல் எலிபன்ட் ஹவுஸில் குண்டு வெடித்துப் பலர் இறந்தனர். இதற்கு அடுத்ததினமான மே31 இல்மட்டக்களப்பிலிருந்து வந்த ரயிலில் வெயாங்கொடையில் குண்டு வெடித்து 15 பேர் வரை பலியானார்கள். மீண்டும் 5 தினங்களுக்குப் பின்னர் ஜூன் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ரயிலில் மாளிகாவத்தையில் குண்டு வெடித்தது.

1987 ஏப்ரல் 21ஆம் திகதியன்று மிகப் பெரிய கார்க் குண்டு ஒன்று புறக்கோட்டையில் வெடிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கானோர் இறந்தனா. 1987 நவம்பர் 9ஆம் திகதி மருதானையில் கார்க் குண்டு வெடித்து 30பேர் இறந்தனர்.

மீண்டும் நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் 1991 மார்ச் 2ஆம் திகதி அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவின் காருக்குக் குண்டு வைக்கப்பட்டு அமைச்சருடன் பலர் இறந்தனர். அதனைத் தொடர்ந்து கடந்த 21ஆம் திகதி கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதிலும் பலர் கொல்லப்பட்டனர்.

1987 ஆகஸ்ட் 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் கைக்குண்டு வீசப்பட்டு மாத்தறை மாவட்ட அமைச்சரும் இன்னொரு அதிகாரியும் இறந்தனர்.

பதினோராவது குண்டு வெடிக்காமல் தங்களைப் படையினர் காப்பரா? என்பதே கொழும்பு வாழ் வாசிகளின் தற்போதைய கேள்வியாகும்.

# தகுந்த விஸா இன்றி இனி பிரிட்டனுக்குள் புக முடியாது!

பிரிட்டனுக்குள் புகும் அகதிகளின் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக அங்குள்ள விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் கடும் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதற்கமையக் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் செல்லுபடியான கடவுச்சீட்டுக்களும், விஸாக்களும் கொண்டுள்ளவர்கள் மட்டுமே பிரிட்டனுக்குள் தற்பொழுது அனுமதிக்கப்படுகிறார்கள்.

பிரிட்டனில் தற்பொழுது வாராந்தம் 1000 பேர் அரசியல் தஞ்சம் கோரி வருகிறார்கள். கடந்த வருடம் அங்கு அரசியல் தஞ்சம் கோரிய 30 ஆயிரம் பேரில் ஒரு சிறு தொகையினரே தாய் நாட்டில் உண்மையாகவே இம்சைப் படுத்தப்பட்டவர்கள் எனப் பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை அங்கு தகுந்த பிரயாண அனுமதிப் பத்திரங்களைக் கொண்டிராத பயணிகளை ஏற்றிவரும் விமானக் கம்பனிகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை இருமடங்காக அதாவது 2000 ஸ்டேலிங்பவுணாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## அரச வைத்தியசாலைகளில் பஞ்சுக்குத் தட்டுப்பாடு

யாழ் சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக்களஞ்சியத்தில் இப் பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்குப் பஞ்சு கையிருப்பில் இல்லை என்று அறியப்படுகின்றது.

காயங்களுக்கு மருந்துகட்டுவதற்கும், இதர தேவைகளுக்கும் வைத்தியசாலைகளிற் பஞ்சு தட்டுப்பாடாக உள்ளது.

கிராமப்புற வைத்தியசாலைகள் பலவற்றில் காயங்களுக்கு மருந்துகட்டத் தேவைப்படும் இதர பொருள்களான லினற், கோஸ், பிளாஸ்டர் என்பனவுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது (13)

## சத்திரசிகிச்சை மாணிப்பட்டம் முதற்தடவையாக வழங்கப்படுகிறது

யாழ் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு முதன் முதலாகச் சித்த மருத்துவத் துறையில் சத்திர சிகிச்சை மாணிப்பட்டம் (BSMS) நான்கு மாணவர்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு டிப்ளோமாப் பட்டம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

இம்முறை யாழ் பல்கலைக் கழகத்தின் மூதவையினரின் முயற்சியால் இலங்கையில் முதற்தடவையாக இப்பட்டம் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ப-11)

## லீலாவதி நினைவுப் பேருரைகள் 8ஆம் 9ஆம் திகதிகளில் இடம்பெறும்

யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவையொட்டி சிமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை 8ஆம் 9ஆம் திகதிகளில் பிற்பகல் 3.30 மணிக்குப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

மு. ஞானப்பிரகாசம்(பி. ஏ, பி.எஸ் சீ.) 'தமிழகமும் சைவ சிந்தனையும்' என்னும் பொருள் பற்றி 8 ஆம் திகதி நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

9ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்குப் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் 'வளர்ச்சியில் இருந்து அபிவிருத்திக்கு நோக்குகளும் திறமைகளும்' பற்றி நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

இப்பேருரைகள் ஆங்கிலத்தில் இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ப-11

# பாடசாலை அதிபர்கள் முகாமையாளர்களாவர்

பாடசாலை அதிபர்களை இனிமேல் முகாமையாளர்களாகவும் பணிபுரியக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் அந்த நிறுவனத்தின் உள்ளீடுகளைக்கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டு உச்ச இலாபத்தை அளிப்பதுபோல கல்லூரியிலோ அல்லது பாடசாலையிலோ உள்ள வளங்களைக்கொண்டு முடிந்தளவு சிறந்த வெளியீடுகளைச் செய்ய வேண்டியது பாடசாலையின் முகாமையாளரான அதிபரின் பொறுப்பாகும் என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலையை நிர்வகிக்கும் அதிபருக்கு பூரணமான அதிகாரங்களை வழங்கவும் கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (33)

## விதைகள் இலவசம்

பல் பயன் பயக்கும் எண்ணெயும், பசளையாக உதவும் பிண்ணாக்கும் தந்துதவும் முத்தாமணக்கு விதைகள் தேவைப்படுவோரைச் சுயவிலாசமிடப்பட்டு அஞ்சல் முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்பி இலவசமாகப் பெற்றுப் பயனடையும்படி மில்க்வைற் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## அதிகரிக்கும் கொலைகளைத் தடுக்க மீண்டும் பகிரங்க மரணதண்டனை

பாகிஸ்தானில் மீண்டும் பகிரங்க மரணதண்டனையை அமுலுக்குக் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது.

அங்கு தற்பொழுது கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதையடுத்தே இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாது வைத்திருக்கும் சகல ஆயுதங்களையும் உடன் ஒப்படைத்து விடுமாறு பாக் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது

## கேள்விப்பத்திரச் சபைகளை துரிதமாக இயக்க நடவடிக்கை

அமைச்சரவையினால் நியமிக்கப் பெற்ற கேள்விப்பத்திரச் சபைகளின் உறுப்பினர்கள் சிலர் ஒழுங்காகக்கூட்டங்களுக்கு பங்குபற்றாததன் காரணமாக கேள்விப்பத்திரங்களைத் துரிதமாக வழங்க முடியாமலுள்ளதாக அறியப்படுகின்றது.

இதனால் இக்கேள்விப்பத்திரச்சபை உறுப்பினர் ஒருவர் இத்தீவுக்கு வெளியே சென்றிருந்தாலோ, சுகயீனம் உற்று இருந்தாலோ, இத்தகைய பிறகாரணம் நிமித்தமாகவோ இக்கூட்டங்களில் பங்குபற்ற இயலாது இருந்தால் இதுபற்றி சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் அமைச்சரவைச் செயலாளருக்கு அறியத்தரமிடத்து, கேள்விப்பத்திரச்சபைக் கூட்டங்களிற்கு சமூகமளிக்காத உறுப்பினருக்குப் பதிலாக பிறிதொரு அலுவலரை அமைச்சரவைச் செயலாளர்நியமிக்க வேண்டும் எனத் திறைசேரிபிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (78

## இந்தியா விஜயம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

புதிய இந்திய அரசுடன் தமிழ் நாட்டிலுள்ள இரண்டு லட்சம் அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து இவர் ஆலோசனை நடாத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.


## ஆண் தாதிகள் தேவை

தனியார் வைத்திய நிறுவனமொன்றில் கடமை புரிவதற்கு ஆண் தாதிகள் தேவைப்படுகின்றார்கள். தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும். பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:-

விளம்பர இல. 302
மே/பா. முரசொலி
கல்வியங்காடு

07027

## மணமகள் தேவை

கனடாவின் நிரந்தரப் பிரஜையும் 32வயதுமுடைய வருமான விஸ்வகுல மகனுக்கு பெற்றோர் படித்த அழகிய மணப்பெண் தேடுகிறார்கள். முதற்கண் சாதகப்பிரதியுடன் கீழ்க்கண்ட விளம்பரஇலக்கத்திற்கு மனுச்செய்யவும். சாதகப் பொருத்தம் காணப்படின் நேரடித்தொடர்பு கொள்ளப்படும்.

விளம்பர இல. 301,
முரசொலி,
கல்வியங்காடு.

07024

## தாதியர் பயிற்சி நெறி
## TRAINING FOR NURSING

**19- 07- 1991 இல் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன**

(சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தாதியருக்குரிய பாடத்திட்டப்பரீட்சைப் பெறுபேறுகள்)

1. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஏற்றது

தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)

காலம்:- 1 வருடம் { பாடத்திட்டம் 6 மாதம் / செய்முறைப் பயிற்சி 6 மாதம்

**பயிற்சி நெறிக்கான முழுக்கட்டணம் ரூபா 1500/-**

(இலகு தவணை முறைகளில் செலுத்தலாம்)
(மாணவர் தொகையை மட்டுப்படுத்தியுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்)

குறிப்பு:- மாவீரர் குடும்பத்தவருக்கு இலவசக்கல்வி

அதிபர்: வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 6, பருத்தித்துறை வீதி, (1 ஆம் ஒழுங்கை)
(மக் ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர்.

07016

## திக்கம் வெற்றி பெற்றது

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தினர் வீரவேங்கை காவேரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக கடந்த 16ஆம் திகதி தொடக்கம் நடாத்திவந்த எறிபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அல்வாய் மேற்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக வீராங்கனைகள் வெற்றிபெற்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

12 விளையாட்டுக்கழகங்களின் அணிகள் பங்குபற்றிய இப்போட்டியை இளைஞர் சேவை உத்தியோகத்தர் செல்வி எ. சிவரஞ்சினி நெறிப்படுத்தினார். (16)

## யாழ் ஆயர் முன்வைத்த சமஷ்டி ஆட்சியை
# பரிசீலிக்க சபையில் அழைப்பு!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாழ் ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை முன்வைத்த கருத்தாகிய சமஷ்டிமுறை ஆட்சியைப்பற்றி ஆராயுமாறு பாராளுமன்றத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது சபை முதல்வரும் கைத்தொழில் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க இக் கோரிக்கையை விடுத்தார்.

சமஷ்டி முறையில் என்ன தவறு இருக்கிறது. நாட்டு நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்காக அது குறித்துப் பரிசீலிப்பதில் என்ன தவறு? என்றும் அவர் அங்கு அப்போது கேள்வி எழுப்பினார். (16)

## தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரும், யாழ் கல்வித் திணைக்களமும் சேர்ந்து நடத்தும் தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கு 7 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலை 9 மணி முதல் 4.30 வரை நடைபெறும். இக்கருத்தரங்கிற்கு கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் வி. ஆறுமுகம், கலாநிதி சு. சசிந்திரராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

## யாழ் மாணவருக்குத் தனிச்சிங்கள
## மகாப்பொலப் படிவங்கள்

மகாபொல சம்பந்தமான விண்ணப்பப்படிவங்கள், கடிதங்கள் யாழ்ப்பாணப்பகுதி மாணவர்கள் சிலருக்குத்தனிச் சிங்களத்திலேயே அனுப்பப் பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்கள் மாணவர்களால் நிரப்பப்பட்டு அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்களாலேயே அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

சிங்களத்தில் உள்ள இந்தப் படிவங்களை மொழிபெயர்ப்பதற்காக மாணவர்கள் அரச திணைக்களங்களில் உள்ளவர்களை நாடி அலைவதைக் காணமுடிகிறது (33)

## ஒதுக்கீடு

தென்பகுதி வீதிகளைப் புனரமைப்பதற்கென 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடகிழக்குப் பகுதி வீதி புனருத்தாரணத்திற்காக பணம்ஒதுக்க வில்லையென்பது குறிப்பிடத்தக்கது,

## 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர்
## இன்னமும் பதிவு செய்யவில்லை

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் சுமார் ஐயாயிரம் பேர் மட்டுமே இதுவரை பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஐம்பது ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் இன்னமும் தமது பெயர்களைப் பதிவு செய்யாமலேயே அங்கு இருந்து வருகின்றனர்.

இதேவேளை அகதிகளைப் பதிவதற்கான இறுதித் திகதியை மேலும் ஒரு வார காலத்திற்கு அதாவது இம் மாதம் 12ஆம் திகதி வரை தமிழக அரசு நீடித்துள்ளது.

இந்திய அரசின் அறிவிப்புக்கிணங்க பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவதில் இலங்கை அகதிகள் அதிக அக்கறை காட்டவில்லை என முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஹலோ,.... ஹலோ....
## பணம் செலுத்தினாலேஇனிப்பதில்

தொலைபேசிக் கட்டணங்களைக் கட்டாத பலரின் தொடர்புகளைத் துண்டிக்க தொலைத் தொடர்புத் திணைக்களம் நடவடிக்கையெடுத்துள்ளது

இதன் முதல் கட்டமாக பெப்ரவரி முதற் மே வரையிலான கட்டணத்தைக் கட்டாதோரின் தொலை பேசித் தொடர்புகள் உடனடியாகத் துண்டிக்கப் படவுள்ளன.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும்.

தென்பகுதியில் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றிருக்கும் பலர் அதற்கான நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாதுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வரதன் விவகாரம்; மரண அறிக்கை
## சமர்ப்பிக்க நீதிபதி உத்தரவு

நுவரேலியாவில் வைத்து நஞ்சு அருந்தி மரணமானவர் பொலிஸாரினால் தேடப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த நடராஜா வரதன் தானா என்பது குறித்துத் தற்பொழுது உயர்மட்டத்தில் ஆராயப்படுவதாக ஏஜன்ஸி செய்தியொன்று தெரிவிக்கின்றது.

சந்தேகநபர் அருந்திய நஞ்சு சயனைட் தானா என்பது குறித்து இன்னமும் நிருபிக்கப்படாத நிலையில் சந்தேக நபரின் மரணம் குறித்துத் தகுந்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு மரண விசாரணையை நடாத்திய நீதிபதி ஷிராங்கனி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரின் உடலில் வெளிக்காயங்கள் இல்லாத போதிலும் அவர் இம்சைப்படுத்தப்பட்டிருக்கலாமென சட்டவைத்திய அதிகாரி பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இச்சம்பவம் தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் இரு தமிழ் அரசியல்வாதிகள் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## படகுச் சேவை பாதிப்பு

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்த குமுதினிப் படகின் அடித்தளம் சேதமடைந்துள்ளதனால் தற்போது நயினாதீவில் வைத்துத் திருத்தப்படுவதாக நெடுந்தீவுப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பிரயாணிகள் நன்மையைக் கருதிச் சிறிய இயந்திரப் படகுகளைச் சேவையிலீடுபட முயற்சி நடப்பதாகவும் ஆனால் தற்போது வீசும் பலமான காற்றினால் இது தடைப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்

இதனால் நெடுந்தீவுப் பிரயாணிகள் யாழ் குடாநாட்டுக்கான தமது பயணத்தைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது (78)

## பண்ருட்டி தாக்கப்பட்டதை அடுத்து
## தமிழகத்தில் பல பஸ்கள் தீக்கிரை

தமிழக சட்ட சபையில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் தாக்கப்பட்டதையடுத்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் வன்செயல்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது,

அம்பேத்கார், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, சென்னை அண்ணா, திருச்சி மாவட்டங்களில் பல பஸ்கள் தீக்கிரையாக்கப் பட்டன.

பல இடங்களில் கல்வீச்சுக்களும் இடம் பெற்றன. இதனால் அங்கு பல பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இராமச்சந்திரன் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் இராமதாஸ் சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

## புதியகல்வியாண்டு
## நவம்பரில் ஆரம்பமாகும்

யாழ் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு நவம்பரில் 1990-91 புதிய கல்வியாண்டினைத் தொடங்கப்போவதாகப் பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவிற்குக் கடிதம்எழுதியுள்ளார்.

இப்புதிய கல்வியாண்டு மாணவர்களுக்குக் குறைந்தது 4 மாதகால 'கெல்ற்' ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தத்திட்டமிட்டு இருப்பதாகவும் இதில் விரிவுரையாளர் மற்றும் வெளிக்களப்பயிற்சி மாணவர்களுக்கான பணச் செலவினைப் பல்கலைக்கழக நிதியில் இருந்து வழங்கப் போவதாகக் குறிப்பிட்டு அவர் கடிதம் எழுதியுள்ளார். ப-11

## தமிழகத்திற்குக் காவிரி நீர்
## வழங்கக் கர்நாடகம் மறுப்பு!

தமிழகத்திற்குக்காவிரி ஆற்று நீரை வழங்க முடியாது என கர்நாடக அரசு தெரிவித்துள்ளது.

நீர் வழங்குவது தொடர்பாகத் தமிழக முதலமைச்சரோ அல்லது இந்திய மத்திய நடுவர் மன்றமோ எமக்கு ஆலோசனை கூறத் தேவையில்லை எனக் கர்நாடக முதலமைச்சர் பங்கரப்பா நேற்றுக் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, கர்நாடக அரசு தமிழகத்திற்கு உடனடியாக நீர் வழங்கவேண்டும் என மிரட்டியிருந்ததும், வழங்காவிட்டால் மத்திய அரசிடம் முறையிடுவேன் எனக் குறிப்பிட்டிருந்ததும் தெரிந்ததே.

## இந்தியருபா மதிப்பிறக்கத்தையடுத்து
## தங்கத்தின்விலைஅதிகரிப்பு!

இந்தியாவில் இரண்டாவது தடவையாக ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதை அடுத்து அங்கு தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது,

நேற்று முன்தினம்சென்னை நகரில் தங்கத்தின் விலை ஒரு கிராம் 434 ரூபாவாக அதிகரித்துள்ளது அதற்கு முதல் நாள் 380ரூபா என்ற அளவில் தங்கத்தின் விலை இருந்தது.

இதே வேளை சென்னையில் ஒரு கிலோகிராம் வெள்ளியின் விலை 7400 ரூபாவாக அதிகரித்துள்ளது. இது முன்னைய விலையை விட 200 ரூபா அதிகமாகும்.

## இந்திய-இலங்கைக்கடல் எல்லையில்
## மீன்பிடிக்கப்புதிய கட்டுப்பாடு

இந்திய இலங்கை கடல் எல்லையில் முன் 5 மைல் பகுதியில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கள் காலை 6 மணிமுதல் தஞ்சை, புதுக்கோட்டை, சிதம்பரனார், இராமநாதபுர மாவட்டக் கடல் பகுதியில் இச்சட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை தமிழக மீனவர்களின் விசைப்படகுகள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும், ஏனைய படகுகள் 31 ஆம் திகதிக்கு முன்னரும் பதிவு செய்யப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொம்படிவெட்டை வழியாக
## பயணம் செய்வோர் தொகை அதிகரிப்பு

கொம்படி வெட்டையில் நீர் வற்றியுள்ளமையால் தற்போது அதிகளவு துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் அப்பாதையினால் போக்குவரத்துச் செய்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தற்போது கூடிய காற்று வீசுகின்றமையால் கொம்படி வெட்டைப் பகுதியில் புழுதி மேலெழும்பிப் பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (43)

## மேசைப் பந்தாட்டப் போட்டி

யாழ் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தினால் யாழ் மாவட்டத்தினுள் - சகலருக்குமான ஆண்கள், பெண்களுக்கான ஒற்றையர், இரட்டையர், ஆண் — பெண் இரட்டையர் ஆட்டங்கள் நடாத்தப்படவுள்ளன.

இதில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர்களையும் போட்டிப் பணத்தையும் இம் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டுக்கழகத்திடம் கையளிக்குமாறுகேட்கப் பட்டுள்ளனர். (16)

## இந்திய இராணுவத்தால் பாதிக்கப்பட்ட
## தானுவே ராஜீவைக்கொலை செய்தாராம்

இந்திய இராணுவத்தினர் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையின்போது நேரடியாகப் பாதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவரே ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததாக இந்திய விசேட புலனாய்வுத்துறை தற்பொழுது அறிவித்துள்ளதாக பி.ரி. ஐ செய்தியொன்று தெரிவிக்கின்றது.

ராஜீவைக் குண்டு வைத்துக் கொன்ற இறந்த இளம் பெண்ணின் பெயர் தானு எனவும் இவர் இலங்கையின் வட பகுதியைச் சேர்ந்தவரெனவும் இந்திய புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் தானு இந்திய இராணுவத்தின் நடவடிக்கையின்போது இலங்கையில் பாதிக்கப்பட்டவரெனவும் பி.ரி ஐ. செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## பயிற்சிக்கு கட்டுப்பாடு

தபால் தந்தி தொடர்புகள் அமைச்சினால் வெளிநாடுகளுக்குப் பயிற்சிபெற உத்தியோகத்தர்கள் அனுப்பப்படுவது இவ்வாண்டு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திறைசேரி இதற்கான பண ஒதுக்கீட்டைச் செய்யாததாலேயே இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தபால் திணைக்களம் செலவு செய்யாத பயிற்சி நெறிகளுக்கு மட்டுமே உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். (33)

★ சார்க் நாடுகளின்

# பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்தியா, பாக். பின்னடிப்பு!

சார்க் நாடுகளின் கூட்டத் தொடரின்போது பயங்கரவாதத்தடைச்சட்டம் ஒன்றை அமைப்பு நாடுகளிடையே கொண்டு வருவதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் பின்னிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இந்நாடுகள் தவிர்ந்த ஏனைய ஐந்து சிறிய நாடுகளும் இலங்கையின் தலைமையில் இச்சட்டத்தை தமது நாடுகளில் அமுல் செய்ய முடிவு செய்துள்ளனவாம்.

இதற்கென நிபுணர் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## பல்கலைக்கழகத் தெரிவு புதிய குழு நியமனம்

பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக புதிய குழுவொன்றை கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி நியமித்துள்ளார்

இக்குழுவில் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழக அனுமதி முறையில் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்தின்படி சாதி, மத இன அடிப்படையில் எவருக்கும் பாதிப்பு ஏற்படாது இருக்க வேண்டும் என்று அமைச்சர் இக்குழுவிடம் கேட்டுள்ளார். (33)

## யாழ் மாவட்ட விளையாட்டுப் போட்டிகள்

யாழ் மாவட்டத்துக்கான தட, கள விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம அதிதியாக யாழ் அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகரும், சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் கலந்துகொள்வார்கள். உதவி அரச அதிபர் எஸ். ஐ. நித்தியராஜ் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் 47

## தோட்டப் பாடசாலை ஆசிரிய இடமாற்றம்

தோட்டப்பாடசாலை ஆசிரியர் நியமனம் பெற்று நகர்ப்புற அரசாங்க பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரிய ஆசிரியைகளை மீண்டும் தோட்டப் பாடசாலைகளுக்கு மாற்றுமாறு கல்வி அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

தோட்டப்பாடசாலை ஆசிரியர் சிலர் அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்து நகர்ப் புறபாடசாலைகளுக்கு இடமாறிச் சென்றுள்ளதாக கிடைத்த புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இச் சுற்று நிருபத்தை அடுத்து இவ்வாறு நகர்ப்புற பாடசாலைக்குச் சென்றவர்கள் மீண்டும் தோட்டப் பாடசாலைகளுக்கு இடம் மாற்றப்படுவதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன (33)

### சார்க் ..

அநேகமாக சார்க் மாநாடு நடக்க திட்டமிடப்பட்டுள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் நகரமத்தியில் அமைந்துள்ளதால் மகாநாடு நடக்கும் மூன்று தினங்களுக்கும் அப்பகுதியில் பிரதான வீதியை தவிர்ந்த ஏனைய வீதிகளை போக்குவரத்துக்கு மூடிவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்சப்படுகிறது.

மகாநாட்டு தலைவர்களுக்கு உயர் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு மேலதிகமாக பாதுகாப்பு படையினர் மூன்று தினங்களுக்கு கொழும்பில் தங்கவைக்கப்படுவர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்புக்கு வெளியே உள்ள ஹோட்டல்களிலேயே அரச தலைவர்கள் தங்க வைக்கப்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

### புகையிரதப் ..

தரவு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் தாம் எவ்வாறு அப்பகுதியில் பணிபுரிவது என்று அவர்கள் அச்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

### பாகிஸ்தானிடமிருந்து

பாகிஸ்தானிடம் இருந்து கடற்படையினருக்காக கொள்வனவு செய்யப்பட்ட பீரங்கிக் குண்டுகள் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. 74

### பிறப்பு ..

பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும் பிறப்பு அத்தாட்சிப்பத்திர போலித்தயாரிப்பாளர்கள் வேஜாகளே இவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திர புத்தகங்களும் கையொப்பம் இடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## ஷெல் வெடித்ததில் இளைஞர் கை அகற்றம்

நேற்று பிற்பகல் கட்டுடை வயலில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அப்பகுதியில் கண்டெடுத்த ஷெல் குண்டை எடுத்து குத்திப்பார்த்த போது தவறுதலாக வெடித்ததினால் வலது கை பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த சிவகுமார் (18) என்பவரே காயப்பட்டவராவர்.

இவரது வலது கை சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுவிட்டது. 79

## மாவீரன் பெயரில் வீதி திறப்பு

வீரவேங்கை லெப்ரினன்ட் நேதாஜீ - இரத்தினசிங்கம் மங்களேஸ்வரன் பெயரில் நல்லூர் அரசடியில் வீதியொன்று நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது. 47

## கிளிநொச்சிப் பகுதியில் மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் வழங்கவில்லை

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்குரிய மதிய உணவு முத்திரைகளுக்கு தை மாதத்திலிருந்து உணவுப்பொருள்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில கூட்டுறவுச் சங்கக் கிளைகள் குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களுக்குஇதற்கான பொருள்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதி பாடசாலை மாணவர்களுக்குரிய உணவுப்பொருள்களை வழங்குமாறும் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-6)

## விசேட படி கிடைக்கும்

கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட படிகள் நிறுத்தப் பட்டதாகச் செய்திகள் தெரிவித்த போதிலும் இவ் விசேட படிகள் வழங்கப்படவுள்ளதாகக்கல்வி, உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது மானியத்தில்நிதி போதியளவு இல்லாமையாலேயே இது நிறுத்தப்பட்டதாகவும் மானியத்தில் போதியளவு நிதி சேரும் பட்சத்தில் மாகாணசபைகள் மூலம் உரிய கொடுப்பனவுகள் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 74

### இந்திய ...

இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவ்தாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நாட்டின் பிரஜைகள் இல்லாத இந்திய வம்சாவளியினர் இங்கிருக்கும் வரைசகல உரிமைகளையும் அனுபவிக்கலாம் என்று சர்வகட்சி மகாநாட்டில் அரசியல் அமைப்பு விதி 14 (2) சரத்துக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன

இந்தச் ஷரத்தை அரசியலமைப்பின் 17வது திருத்தப் பிரேரணையிலிருந்து நீக்கிவிடுவதென்றும் சர்வகட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## அரச ஊழியர் இடமாற்றம் அமைச்சு சுற்று நிருபம்

அடுத்த ஆண்டு முதல் அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்கள் குறித்தும் இடமாற்றச் சபைகள் நியமிப்பது குறித்தும் பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

இம் மாதத்திலிருந்து இடமாற்றச்சபை அமைக்கப்பட்டு இடமாற்றக் கொள்கை உருவாக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படல் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம்முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைய வேண்டும் 15. 8. 91ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றச்சபைக்கு விவரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

15. 10. 91க்கு முன்னர் இடம் மாற்றம் பற்றிய தீர்மானம் உரிய அலுவலர்க்கு அறிவிக்கப்படவேண்டும்.

01. 11.91ல் மேன்முறையீடுகள் பெறப்படல் வேண்டும் 15. 11. 91ல் மேன்முறையீடுகள் பற்றிய தீர்மானம் அலுவலர்க்குஅறிவிக்கப்பட வேண்டும் 01. 01 92ல் இடமாற்றம் செயற்படுத்தப்பட வேண்டும்.

மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விருப்புரிமையற்ற சேவை நிலையம் ஒன்றில் பணிபுரியும் ஒருவர் இடமாற்றம் பெறத் தகுதி உடையவர்.

இதேபோல விருப்புரிமை உடைய சேவை நிலையம் ஒன்றில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அலுவலர் ஒருவர் விண்ணப்பம் இன்றி இடமாற்றம் செய்யப் படுவார்.

ஆனால் 53 வயதைத் தாண்டிய அவரது விருப்பமின்றி மாற்றப்படலாகாது.

## மில்லர் நினைவுக் கூட்டங்கள்

87ஆம் ஆண்டு யூன் மாதம் நெல்லியடி இராணுவ முகாமினைத் தகர்த்தெறிந்த கரும்புலி கப்டன் மில்லரின் 4வது ஆண்டு நினைவஞ்சலி வைபவங்கள், பொதுக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன.

வடமராட்சி எங்கும் மில்லரின் புகைப்படங்கள் வைக்கப்பட்டு மலர் தூவி மக்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

மாலை 6 மணிக்கு நெல்லியடிப் பகுதியில் கரும்புலி கப்டன் மில்லர் நினைவுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் பலர் உரையாற்றினர் (79)

## வெற்றிலைக்கேணி கடலில் குடும்பஸ்தருக்குச் சூடு

நேற்றுக்காலை வடமராட்சி கிழக்குப்பகுதியான வெற்றிலைக்கேணி கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகினார்.

வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த ஐயக்குட்டி சுப்பிரமணியம்(33 என்பவரே வயிற்றுப்பக்கத்தில் காயப்பட்டவராவர்.

இச்சமயம் கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. (79

## ஈராக் அணுசக்தி விஞ்ஞானி அமெரிக்காவில் தஞ்சம்

ஈராக்கின் சிரேஷ்ட அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் தனது குடும்பத்துடன் அமெரிக்க காவல் நிலையத்தில் சரண் அடைந்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவிக்கிறது.

ஈராக் ஜனாதிபதி சதாமின் விஞ்ஞானியான இவர் அமெரிக்காவின் தாக்குதல்களால் ஈராக்கின் அணுசக்தி நிலையங்கள் அழியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்புகலிடம் பெறுவ தாக நடித்திருக்கலாமென சந்தேகம் ஏற்படுவதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 33

## ஆசிரியர் பயிற்சி நெறி போதனாசிரியர் கருத்தரங்கு

பயிற்சி ஆசிரியர்கட்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி போதனாசிரியர் கருத்தரங்கு எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ் கல்வித்திணைக்களத்தில் காலை 8-30 முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறும்.

இக் கருத்தரங்கிற்குத் தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட உதவி போதனாசிரியர்கள் யாவரையும்சமுகம் கொடுக்கும்படி கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

## இளைஞர் முதியோருக்கு பண்ணிசை வகுப்புகள்

புற்றளை சித்திவிநாயகராலய மடாலயத்தில் இளைஞர், முதியோருக்கான பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இளைஞர்,முதியோருக்கான பண்ணிசை வகுப்பின் ஆசிரியராக எஸ். இராஜதுரை பணியாற்றிவருகின்றார்.

பயில விரும்பும் இளைஞர், முதியோர்கள் உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளலாமென ஆலயதருமகர்த்தா சபை அறிவித்துள்ளது.

இம்மடாலயத்தில் அண்மையில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (15)

## வெளிச்சம் இல்லை

யாழ் பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவிலிருந்து இரவு நேரங்களில் மகப்பேற்று விடுதிக்கு செல்வதில் ஊழியரும் நோயாளிகளும் வெளிச்சமின்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர். 79

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 06.07. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.